# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,908—1970 මැයි 29 වැනි සිකුරාදා—1970.5.29

14,908 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு மே மாதம் 29 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யக்கூடியதாக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விளக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | 323 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | 323 | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 324 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 323 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


### மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 184

எண். டி. 252/ஆர்ஈசிறி/4

#### இலங்கை அரச ஆகாயப்படை—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஏற்றம்

1970, மாச்சு மாதம் 1 ஆம் திகதியிலிருந்து தற்காலிக "விங் கொமாண்டர்" ஆகக் கடவர் :—

"ஸ்குவாட்றன் லீடர்" டொன் பந்துல சனத் வீறத்ன—(01040) பரிபாலனம்.

அதி உத்தமரின் ஆணைப்படி,
ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மே மீ 16 ந் வ.

5-648

### மற்றைய நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 185

#### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

செல்வி பத்மினி செல்வதுரை நுவரஎலிய நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

5-653

### அரசாங்க அறிவித்தல்கள்

எல். டீ.—பீ. 15/36

#### சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம்

35 (1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

(54 ஆம் அத்தியாயமான) சிறைச்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 35 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு, நீதி அமைச்சர், அலெக்சாந்தர் பெயர்லி விஜேமான்ன ஆகிய நான் திருவாளர்கள் டி. எஸ். குணசேகரா, டி. ஈ. பெரேரா, ஆர். ஸ்ரான்லி

#### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் வ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

விஜேதுங்கா, யு. பி. ராஜகருணு ஆகியோரை 1970 ஏப்பிரல் 21 ஆந் தேதியிலிருந்து தொடங்கும் ஓராண்டு காலத்திற்கு அனுராதபுரம் திறந்தவெளிச் சிறைச்சாலை முகாமிற்கான உள்ளூர் இடைவருங்குழுவின் உறுப்பினர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

ஏ. எப். விஜேமான்ன,
நீதி அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மே 15 ந் வ.

5-608/1

---

எல். டீ.—பீ. 15/36

## சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம்

### 35 (1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

(54 ஆம் அத்தியாயமான) சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 35 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு நீதி அமைச்சர் அலெக்சாந்தர் பெயர்லி விஜேமான்ன ஆகிய நான் திருவாளர்கள் டீ. எஸ். குணசேகரா, டீ. ஈ. பெரேரா, ஆர். ஸ்ரான்லி விஜேதுங்கா, யூ. பீ. ராஜகருணு ஆகியோரை 1970 ஏப்பிரல் 21 ஆந் தேதியிலிருந்து தொடங்கும் ஓராண்டு காலத்திற்கு அனுராதபுரம் சிறைச்சாலைக்கான உள்ளூர் இடைவருங்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கின்றேன்.

ஏ. எப். விஜேமான்ன,
நீதி அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மே மீ 15 ந் வ.

5-608/2

---

## விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

(நானாவித பொருட்களின்) விலைக்கட்டுப்பாட்டதிகாரியாற் செய்யப்பட்டு 1970 ஏப்பிரல் 1 ஆந் தேதிய 14,899/5 ஆம் இலக்க அதிவிசேட அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட 1970 இன் 2 ஆம் இலக்க (இறக்குமதி செய்யப்பட்ட துணி வகைகள்) விலைக் கட்டுப்பாட்டுக் கட்டளையை அரசாங்க அலுவல் அமைச்சர் அங்கீகரித்துள்ளார் என (173 ஆம் அத்தியாயமாகிய) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (7) ஆம் பிரிவின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

ஆனந்த திஸ்ஸ த அல்விஸ்,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க அலுவல் அமைச்சு.

கொழும்பு 1,
1970 ம் ஆண்டு மே மீ 19 ந் வ.

5-680

---

## விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

(நானாவித பொருட்களின்) விலைக்கட்டுப்பாட்டதிகாரியாற் செய்யப்பட்டு 1970 மார்ச் 31 ஆந் தேதிய 14,899/4 ஆம் இலக்க அதிவிசேட அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட 1970 இன் 3 ஆம் இலக்க (முள் கம்பி) விலைக் கட்டுப்பாட்டுக் கட்டளையை அரசாங்க அலுவல் அமைச்சர் அங்கீகரித்துள்ளார் என (173 ஆம் அத்தியாயமாகிய) விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (7) ஆம் பிரிவின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

ஆனந்த திஸ்ஸ த அல்விஸ்,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க அலுவல் அமைச்சு.

கொழும்பு 1,
1970 ம் ஆண்டு மே மீ 19 ந் வ.

5-679

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## காலி மாவட்டத்தில் தல்பே பத்து பிரிவுக் காரியாதிகாரியின் பகுதியில் கிராம சேவகர் பிரிவு/ பிரிவுகளைத் திருத்தியமைத்தல்

1970, யூன் மாதம் 1 ஆந் திகதியிலிருந்து காலி பரிபாலன மாவட்டத்தில் தல்பே பத்துப் பிரிவுக் காரியாதிகாரியின் பகுதியில் 182 ஆம் இலக்க மாகெதற கிராம கிராம சேவகரின் பிரிவை மாகெதற, உடுவெல்ல எல்ல—இகல என இரு கிராம சேவகர்களின் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ள தென்பதைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

(அ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள குடியேற்றம்/கிராமம் 182 ஆம் இலக்க மாகெதற கிராம சேவகரின் பிரிவினுள் அடங்கும் :—

(1) மாகெதற (ஒரு பகுதி)
(2) மாகெதற குடியேற்றம்
(3) பத்தாறே
(4) கறுவலவில
(5) இத்தகெட்டிய
(6) யட்டமலகல
(7) களுதியவல

(ஆ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராமங்கள் 182 ஏ ஆம் இலக்க உடுவெல்ல—எல்ல இகல கிராம சேவகரின் பிரிவினுள் அடங்கும் :—

(1) மாகெதற (ஒரு பகுதி)
(2) விலவில
(3) களுமட
(4) எல்ல இகல
(5) உடுவெல்ல
(6) றத்தமலகெட்டிய
(7) பொஹொறதெனிய

2. இக்கிராம சேவகர்களின் பிரிவுகளுக்குரிய நீதிமன்றம், கிராமக் கோடு, பொலிஸ் பிரிவு, பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகாரரின் பிரிவு, ஸ்தல ஸ்தாபன சபைகள், வாக்காளர் தொகுதி ஆதியனவற்றை யாவரும் அறிந்துகொள்ளும் வண்ணம் கீழ் காட்டப்பட்டுள்ளன :—

(1) கிராம சேவகரின் பிரிவு :
  (1) மாகெதற
  (2) உடுவெல்ல—எல்ல இகல
(2) நீதிமன்றம் : காலி
(3) கிராமக் கோடு : கொட்டவ
(4) பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகாரரின் பிரிவு : வளவே
(5) ஸ்தல ஸ்தாபன சபைகள் : பொல்பாகொட கிராமசபை
(6) வாக்காளர் தொகுதி : இல. 59, பத்தேகம
(7) பொலிஸ் நிலையம் : யக்கலமுல்ல

பீ. ஏ. ரீ. குணசிங்க,
அரசாங்க அதிபர், காலி மாவட்டம்.

கச்சேரி, காலி,
1970 ம் ஆண்டு ஏப்ரில் மீ 25 ந் வ.

5-571/1

---

## காலி மாவட்டத்தில் நாலுகடவத்தை பிரிவுக் காரியாதிகாரியின் பகுதியில் கிராம சேவகர் பிரிவு/ பிரிவுகளைத் திருத்தியமைத்தல்

1970, யூன் மாதம் 1 ஆந் திகதியிலிருந்து காலி பரிபாலன மாவட்டத்தில் காலி நாலுகடவத்தை பிரிவுக் காரியாதிகாரியின் பகுதியில் 109 ஆம் இலக்க இகலகொட கிராம கிராம சேவகரின் பிரிவை இகலகொட மேற்கு, இகலகொட கிழக்கு என இரு கிராம சேவகர்களின் பிரிவுகளாக பிரிக்கப் பட்டுள்ளதென்பதைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

(அ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள குடியேற்றம்/கிராமம் 109 ஆம் இலக்க இகலகொட மேற்கு கிராம சேவகரின் பிரிவினுள் அடங்கும் :—

(1) அம்பகஹவில
(2) அண்டிகொட
(3) பதுங்கொட
(4) ஓபடகொட
(5) இந்திகஹதொட்ட
(6) நவந்தென்னகொட
(7) என்டெறகொட

(ஆ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராமங்கள் 109 ஏ ஆம் இலக்க இகலகொட கிழக்கு கிராம சேவகரின் பிரிவினுள் அடங்கும் :—
(1) இகலகொட

2. இக்கிராம சேவகர்களின் பிரிவுகளுக்குரிய நீதிமன்றம், கிராமக் கோடு, பொலிஸ் பிரிவு, பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகாரரின் பிரிவு, ஸ்தல ஸ்தாபன சபைகள், வாக்காளர் தொகுதி ஆதியனவற்றை யாவரும் அறிந்துகொள்ளும் வண்ணம் கீழே காட்டப்பட்டுள்ளன :

(1) கிராம சேவகரின் பிரிவு :
  (1) 109—இகலகொட மேற்கு
  (2) 109 ஏ—இகலகொட கிழக்கு

(2) நீதிமன்றம் : காலி

(3) கிராமக் கோடு : அக்மீமண

(4) பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகாரரின் பிரிவு : அக்மீமண

(5) ஸ்தல ஸ்தாபன சபைகள் : அக்மீமண கிராமசபை

(6) வாக்காளர் தொகுதி : இல. 61, அக்மீமண

(7) பொலிஸ் நிலையம் : அக்மீமண

பீ. ஏ. ரி. குணசிங்க,
அரசாங்க அதிபர், காலி மாவட்டம்.

கச்சேரி, காலி,
1970 ம் ஆண்டு மே மீ 6 ந் உ.

5–571/2

---

ச.வ.பீ. 23/50

**ஈட்டுச் சட்டம்**

(89 ம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தின் 3 (இ) என்னும் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டும், மேற் கூறப் பட்ட சட்டத்தின் 114 (2) ஆம் பிரிவின் கீழ் சபையினுல் ஏற்படுத்தப்பட்ட விகுப்புரையின் மேலும் வர்த்தகப் பணிப்பாளர் பவிக்கு கென்னடிகே பியசிறி டீ சில்வா ஆகிய நான், கற்றன் நஷனல் பாங்க் லிமிட்டெட்டானது அக்கட்டளைச் சட்டத்தின் தேவைகளுக்கென அங்கீகரிக்கப்பட்ட ஒரு கடன் கொடுக்கும் நிலையமாகவிருக்குமென்பதை இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகிறேன்.

பி. எச். பி. டீ. சில்வா,
வர்த்தகப் பணிப்பாளர்.

கொழும்பு,
24.4.1970.

5–573/1.

---

ச.வ.–பி. 16/53

**நம்பிக்கைச் சீட்டுக் கட்டளைச் சட்டம்**

(86 ம் அத்தியாயமான) நம்பிக்கைச் சீட்டுக் கட்டளைச் சட்டத்தின் 5 (1) (அ) என்னும் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு வர்த்தகப் பணிப்பாளர் பவிக்கு கென்னடிகே பியசிறி டீ சில்வா ஆகிய நான், கற்றன் நஷனல் பாங்க் லிமிட்டெட்டானது அக் கட்டளைச் சட்டத்தின் தேவைகளுக்கென அங்கீகரிக்கப்பட்ட ஒரு கடன் கொடுக்கும் நிலையமாகவிருக்குமென்பதை இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகிறேன்.

பி. எச். பி. டீ. சில்வா,
வர்த்தகப் பணிப்பாளர்.

கொழும்பு,
24.4.1970.

5–573/2.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

### அட்டவணை—1970

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஏப்பிறல் | .. | 3.4.70 | வெள்ளி | .. | 25.3.70 | புதன் | .. பி. ப. | 3.30 |
| | | 10.4.70 | வெள்ளி | .. | 3.4.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 17.4.70 | வெள்ளி | .. | 8.4.70 | புதன் | .. பி. ப. | 3.30 |
| | | 24.4.70 | வெள்ளி | .. | 17.4.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 30.4.70 | வியாழன் | .. | 23.4.70 | வியாழன் | .. பி. ப. | 3.30 |
| மே | .. | 8.5.70 | வெள்ளி | .. | 30.4.70 | வியாழன் | .. பி. ப. | 3.30 |
| | | 15.5.70 | வெள்ளி | .. | 8.5.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 22.5.70 | வெள்ளி | .. | 15.5.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 29.5.70 | வெள்ளி | .. | 22.5.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| ஜூன் | .. | 5.6.70 | வெள்ளி | .. | 29.5.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 11.6.70 | வியாழன் | .. | 5.6.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 18.6.70 | வியாழன் | .. | 11.6.70 | வியாழன் | .. ந. ப. | 12.00 |
| | | 25.6.70 | வியாழன் | .. | 18.6.70 | வியாழன் | .. ந. ப. | 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1970 ஆம் ௵ மார்ச்சு ௴ 5 ஆந் ௳.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.